நமக்குத் தேவையில்லை என்று சொல்லும் அளவிற்கு நமக்கு வாய்ப்பு இருக்கின்றது. இங்கே இந்தச் சட்டமே வேண்டாம் என்று சொல்லத்தக்க அளவிற்கு, புதிய சட்டத்தில் ஒரு அமெண்டுமெண்டைச் செய்து கொண்டு, இந்தச் சட்டம் நமக்குத் தேவையில்லை இனி என்ற ஒரு ஏற்பாட்டை அரசாங்கம் செய்யக் கூடாதா என்றுதான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஒரு பள்ளிக்கூடத்தைப் பொறுத்து இப்படிப்பட்ட அவசியம் இருக்கின்றது என்ற அடிப்படையில் இந்தச் சட்டத் திருத்தத்தினைக் கொண்டு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டது. 1949-ல் ஏற்படுத்திய சட்டம் பள்ளிக்கூடங்களைப் பொறுத்தமட்டில் இருந்தால் அது போதும். ஆனால் அதிலே கல்லூரிகளுக்கும் சேர்ந்து இருப்பதால், நாம் கல்லூரிகளுக்கு என்று ஒரு தனிச் சட்டத்தினைக் கொண்டு வரவேண்டும். அந்த நிலை ஏற்படும் வரையில் இந்தச் சட்டம் நமக்குத் தேவைப்படுகின்றது. அதற்குப் பிறகு வேண்டுமானால், இந்த நிலையினை மாற்றிக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள **கேள்வி** :

" தமிழ்நாடு, 1975-ம் ஆண்டு கல்வி நிறுவனங்கள் (சொத்துக்களின் தற்காலிகக் கட்டுப்பாடு) திருத்த-செல்திறன் சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது."

(2) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) 1975 ஆம் ஆண்டு, இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 1975 ஆம் ஆண்டு, இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்